# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/72 - 2018 ඔක්තෝබර් මස 05 වැනි සිකුරාදා - 2018.10.05

*2091/72 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

### உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்

**உயர் நீதிமன்றத்தின் விதிகள் - 2018**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசராலும் அவ்வுறுப்புரையின் கீழ் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்களினாலும் ஆக்கப்பட்ட விதிகள்.*

*(1) டபிள்யூ. பீ. ஜி. டெப், பிரதம நீதியரசர்*
*(2) எஸ். ஈ. வனசுந்தர, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*(3) பி. பீ. அலுவிஹாரே, உயர் நீதிமன்ற நீதியரசர்*
*(4) கே. எஸ். ஜே. த ஆப்ரூ, உயர் நீதிமன்ற நீதியரசர்*

*கொழும்பு,*
*2018, ஒற்றோபர் 04.*

*இவ்விதிகளானவை 2018 ஆம் ஆண்டின் நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் நீதிமன்ற உடைகள் பற்றிய விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். இவ்விதிகள் மூலம் 1978 ஆம் ஆண்டின் நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் நீதிமன்ற உடை பற்றிய விதிகளின் 7 ஆம் விதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிய விதியொன்று பதிலீடு செய்யப்பட்டு திருத்தப்படுவதுடன், பிரதம நீதியரசரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மூலம் விதிக்கப்படும் திகதியிலிருந்து வலுப்பெறும்.*

***1978 ஆம் ஆண்டின் நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் நீதிமன்ற உடை பற்றிய விதிகளின் 7 ஆம் விதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிய விதியொன்று பதிலீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும் திருத்தம் :***

*7. பெண் சட்டத்தரணிமாரின் நீதிமன்ற உடை பின்வருமாறிருத்தல் வேண்டும் :*

*வெள்ளை நிற, கறுப்பு நிற, சாம்பல் நிற அல்லது ஊதா நிற சேலையும் சட்டையும் அல்லது முழங்காலிற்குக் கீழ் நீளமான வெள்ளை நிற, கறுப்பு நிற, சாம்பல் நிற அல்லது ஊதா நிற நீண்ட சட்டை அல்லது கறுப்பு நிற கோற் மற்றும் கணுக்கால் வரை நீண்ட கறுப்பு நிற காற்சட்டை மற்றும் காற்சட்டைக்குள் உட்செலுத்தி, கொலர் உடையதாக கழுத்து வரை அணியப்பட்ட வெள்ளை நிற நீண்ட கையுடைய மேற்சட்டை மற்றும் கறுப்பு நிற நீளங்கி.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உடையானது வெள்ளை நிற நீண்ட கையுடைய மேற்சட்டையுடன் முழங்காலிற்கு கீழ் நீளமான, கழுத்து வரை அணியப்பட்ட கறுப்பு நிற நீண்ட சட்டை மற்றும் கறுப்பு நிற கோற் அல்லது கறுப்பு நிற நீளங்கியுடன் மேற்குறிப்பிட்டவாறான சரியான நிறத்தையுடைய சாரி மற்றும் சட்டையாக அமைதல் வேண்டும்.

டபிள்யூ. பீ. ஜி. டெப்,
பிரதம நீதியரசர்.

எஸ். ஈ. வனசுந்தர,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

பி. பீ. அலுவிஹாரே,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

கே. எஸ். ஜே. த ஆப்ரூ,
உயர் நீதிமன்ற நீதியரசர்.

*10-1197*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.